## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு

**2024–**ஆம் வருடம் ஜனவரி மாதம் **24–**ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் **10.30** மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 22.01.2024

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.7–இல் மாரப்பன் தெருவில் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல் பணி மேற்கொள்ள ரூ. 90000/– மதிப்பீட்டிலான பணிக்கு 17.11.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், இராசிபுரம். | மதிப்பீட்டைவிட 0.08% குறைவு |
| 2. | M/S சுமதி இன்ப்ராடெக் பில்டர்ஸ், இராசிபுரம். | மதிப்பீட்டைவிட 1.22% அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி (0.08 %) அளித்துள்ள M/S. முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டு பணியாணை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/S. முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4866/23/இ1)**

**தீர்மானம் எண். 522**

அங்கீகரிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள கணினிகள், அலுவலகப் பணிகளை செய்து வரும்போது துரிதமாக செயல்படுவது இல்லை. எனவே, அலுவலகப் பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும்பொருட்டு 10 கணினிகளுக்கு SSD கார்டு செலுத்தி பணி செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ. 20000/–ற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (0288/24/இ1)

**தீர்மானம் எண். 523**

அனுமதிக்கப்பட்டது

(3) இந்நகராட்சி அனைத்துப் பிரிவுகள் மற்றும் கணினிப் பிரிவிற்குத் தேவையான சிறிய பிரிண்டர்கள் மற்றும் பெரிய பிரிண்டர்களுக்கு டோனர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(0359/24/பி3)

**தீர்மானம் எண். 524**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 25–இல் கோனேரிப்பட்டிப் பகுதியிலுள்ள கழிப்பிடத்தில் தண்ணீர் வசதிக்கான பைப் லைன் பழுதடைந்தும், மின் இணைப்புகள், உதிரி பாகங்கள் பழுதடைந்துள்ளது. மேற்க்கண்ட கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி செய்யவும், மின்சார வசதி செய்யவும் மற்றும் வர்ணம் பூசுதல் பணி மேற்க்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(0360/24/இ2)

**தீர்மானம் எண். 525**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27–இல் உள்ள ஏரிக்கடைக்கால் ரோடு பகுதியில் சாலைப் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டபொழுது அதனடியிலுள்ள 2" பிவிசி பைப் லைன் குழாய் பழுதடைந்துவிட்டது. எனவே, அதனை புதியதாக மாற்றி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 30000/–ற்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(0361/24/இ2)

**தீர்மானம் எண். 526**

அனுமதிக்கப்பட்டது

(6) நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களது அலுவலக கடித ந.க.எண். **1099/23/பி1** நாள் **13.03.2023**—இல் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. **30000/—**ற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1172/23/எச்1)**

**தீர்மானம் எண். 527**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சியில் **19**—ஆவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு க. நடராஜன் என்பவர் தனது தனிப்பட்ட காரணங்களுக்காக முழு விருப்பத்துடனும், சுயமாகவும் "**வரி மேல்முறையீட்டு குழு உறுப்பினர்**" பதவியிலிருந்து **23.11.2023** அன்று ராஜினாமா செய்கிறேன் என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

அதன்படி **24.11.2023** முதல் கீழ்காணும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள இராசிபுரம் நகராட்சியில் "**வரி மேல்முறையிட்டு குழு உறுப்பினர்**" பதவி காலியாக உள்ளது.

| **வ. எண்.** | **மாவட்டம்** | **நகராட்சியின் பெயர்** | **பதவியின் பெயர்** | **காலி பதவியிடத்தின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| **1** | நாமக்கல் | இராசிபுரம் நகராட்சி | வரி மேல்முறையீட்டு குழு உறுப்பினர் | **1** |

மேற்காணும் விவரம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கும், செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை அவர்களுக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்காணும் "**வரி மேல்முறையிட்டு குழு உறுப்பினர்**" பதவி காலியாக உள்ளதை நகர்மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

மன்றம் ஒப்புதல் வழங்கலாம். மேற்படி "**வரி மேல்முறையிட்டு குழு உறுப்பினர்**" பதவி காலியாக உள்ளதை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கும், செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை அவர்களுக்கும் தெரிவிக்கலாம்.

**(4951/23/அ4)**

**தீர்மானம் எண். 528**

ஒப்புதல் வழங்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். **19**, காட்டூர் ரோடு, வார்டு – B, பிளாக் – **10**, நகர புல எண். **38/29** மற்றும் **39/30**—இல் மனுதாரர் திருமதி T. கலைச்செல்வி, திரு D. ரமேஷ் மற்றும் திரு D. வினோத், கதவு எண். **27/19**, பாரதி நகர், இராசிபுரம் என்பவருக்கு

**2.1344** ஏக்கர் பரப்புள்ள இடத்தில் **28** குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின்மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO/06/**2024** நாள் **02.01.2024**–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகள், சாலைகள், மின்விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை வசதி செய்ய ரூ. **630000/–** சலான் எண். **053/01/1/23–24/0005104** நாள் **18.01.2024**–லிலும், குடிநீர் வசதி செய்ய ரூ. **120000/–** சலான் எண். **053/01/1/23–24/0005105** நாள் **18.01.2024**–லிலும் செலுத்தியுள்ளார்கள். மேலும், மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய இதரக் கட்டணம் ரூ. **65338/–** சலான் எண். **053/01/1/23–24/0005103** நாள் **18.01.2024**–இல் செலுத்தியுள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானபத்திர ஆவண எண். **8441/2023** நாள் **15.12.2023**–இன்படி சாலை பயன்பாட்டிற்காக **2569.55** சதுர மீட்டர் மற்றும் மூலை மடக்கு **10.13** சதுர மீட்டரும் ஆக மொத்தம் சாலை பரப்பளவு **2579.68** சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக **56.27** சதுர மீட்டர் இடமும் ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்ப்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அரசாணை (நிலை) எண். **181** வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் **09.12.2020** மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். **12843/22**/டிபி**2** நாள் **20.10.2022** சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானபத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(216/22/எப்1)**

**தீர்மானம் எண். 529**

ஒப்புதல் வழங்கப்பட்டது

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.